இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 30-06-2023

# ‘குட்கா’ பா.ஜ.க.!

‘குட்கா’ அ.தி.மு.க.வை உங்களுக்குத் தெரியும்! மாமூல் வாங்கிக் கொண்டு தமிழ்நாட்டில் குட்கா விற்பனையை அமோகமாக நடத்தியது பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி. இதோ, இப்போது ‘குட்கா’ குற்றவாளிகளைக் காப்பாற்றி வருகிறது ‘குட்கா’ பா.ஜ.க. இதனை நாம் சொல்லவில்லை. சி.பி.ஐ.தான் சொல்கிறது. பெயர்ப் பொருத்தம் சரியாகத்தானே இருக்கிறது!

**“குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில், அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் டி.ஜி.பி.யாக இருந்த டி.கே.ராஜேந்திரன் மற்றும் காவல் ஆணையர் ஜார்ஜ் ஆகியோர் மீது விசாரணை நடத்துவது தொடர்பான ஒன்றிய அரசின் அனுமதி கடிதம் இன்னும் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்கு எல்லாம் அனுமதி கிடைத்து விட்டது. எனவே கூடுதல் அவகாசம் வேண்டும்” என்று சி.பி.ஐ. நீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறது.**

“அரசின் அனுமதி கிடைக்காவிட்டால் இந்த வழக்கையே எப்படி நடத்துவது?” என்று சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி மலர் வாலண்டினா கேள்வி எழுப்பி இருக்கிறார். இந்த வழக்கு சூலை 17 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்லி பத்தாவது முறையாக இந்த வழக்கின் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 2022 டிசம்பர் 15 முதல் 2023 சூன் 26 வரை பத்து முறை இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

* 2022 டிசம்பர் 15
* 2023 சனவரி 10
* பிப்ரவரி 6
* பிப்ரவரி 17
* மார்ச் 20
* ஏப்ரல் 18
* ஏப்ரல் 25
* மே 11
* சூன் 3
* சூன் 26 - என பத்து முறை வழக்கு விசாரணை நடக்காமல் ஒத்தி வைக்க யார் காரணம்? ஊழல் ஒழிப்பு என்று வாய்கிழியப் பேசும் ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் காரணம். சி.பி.ஐ.யால் குற்றம் சாட்டப்படுபவர்கள் மீது வழக்கு பதிய அனுமதி தராமல் போனதன் மூலமாக ஊழலுக்கும், குட்காவுக்கும் துணை போன ‘குட்கா’ பா.ஜ.க.தான் காரணம்.

**2016 ஆம் ஆண்டு செங்குன்றம் பகுதியில் மாதவராவ் என்பவருக்குச் சொந்தமான குட்கா கிடங்கில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினார்கள். அப்போது ஒரு டைரி சிக்கியது. குட்கா வியாபாரியான மாதவராவ், தனது விற்பனைக்கு உடந்தையாக இருந்தவர்களில் யார் யாருக்கு எல்லாம் மாமூல் கொடுத்தேன் என்பதை டைரியாக எழுதி வைத்துள்ளார். அதில் அ.தி.மு.க. ஆட்சியில் பழனிசாமி அமைச்சரவையில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் பெயர் இருந்தது. டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன், சென்னை காவல் ஆணையர் ஜார்ஜ் உள்ளிட்ட ஒன்றிய - மாநில அரசு உயரதிகாரிகள், காவல்துறை உயரதிகாரிகளின் பெயர்களும் இருந்தன.**

250 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு நடத்திய நிறுவனம் அது. அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில் என்பதுதான் அன்று பரவிய செய்தி ஆகும்.

குட்கா விவகாரத்தில் பல்வேறு மர்மங்கள் இருப்பதாகவும், குற்றவாளிகளை தப்பிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்வதாகவும் பரவலாக பேசப்பட்ட நிலையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். சி.பி.ஐ. விசாரணை தேவை என்று அதில் முறையீடு வைத்திருந்தார். அன்றைய தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி முன்னிலையில் இந்த வழக்கு நடைபெற்றது.

சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை என்று பழனிசாமி அரசு பதில் மனு தாக்கல் செய்தது. ஆனால் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், “டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணபரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது” என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. (2018 ஏப்ரல் 26)

ஆனால் குட்கா குற்றவாளிகளைக் காப்பாற்ற முடிந்தவரையில் முயற்சித்தது பழனிசாமியின் அ.தி.மு.க. ஆட்சி. ரூ.40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அந்த கடிதத்தையே மறைத்தார்கள். அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள். மிஸ்ஸிங் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். ஆறு பேர் மீது மட்டும் முதற்கட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது சி.பி.ஐ. சாதாரண அதிகாரிகள் மீது வழக்குப் பதியவே 20 மாதங்கள் கழித்து - அதாவது 2020 ஜூலை மாதம் தான் அ.தி.மு.க. அரசு அனுமதி கொடுத்தது. அமைச்சர் விஜயபாஸ்கர், முன்னாள் டி.ஜி.பி. டி.கே.ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீதான நடவடிக்கைக்கு அனுமதி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் ஐந்து ஆண்டுகளாக இழுத்தடித்தார்கள். இதற்கு பெரும்பாலும் அ.தி.மு.க. ஆட்சியின் செயல்பாடுகளே காரணமாக இருந்தது. இதோ இப்போது பா.ஜ.க. ஆட்சி தனது வேலைகளைக் காட்டுகிறது.

**காவல்துறை அதிகாரிகள் மீது விசாரணை நடத்தவும், அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் இடையூறாக இருக்கிறது பா.ஜ.க. அரசு. இதனை சி.பி.ஐ. அமைப்பே, சி.பி.ஐ. நீதிமன்றத்தில் சொல்லிவிட்டது. நாம் சொல்லவில்லை.**

**இந்த வழக்கை வைத்துத்தான் அ.தி.மு.க.வை வழிக்குக் கொண்டுவர ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க. அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ரெய்டு நடத்தினார்கள். அதன் மூலமாகத் தான் அ.தி.மு.க.வை தங்களது கட்டுக்குள் கொண்டு வந்தார்கள். இப்போது அதிகாரிகளைக் காப்பாற்றி வழக்கை இழுத்தடிக்கிறது பா.ஜ.க. ‘குட்கா’ பா.ஜ.க. என்றுதானே சொல்ல முடியும்?!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் திருவள்ளூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சீரமைக்கப்பட்டுள்ள 3 பெரியார் நினைவு சமத்துவபுரங்களை, திறந்து வைத்து, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) அவரது இல்லத்தில், சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி 111-வது அ வட்ட துணைச் செயலாளர் திருமதி தேவி கரிகாலன் இளையமகள் சு.சுகி (எ) சித்திரை மல்லி - ஜெ.முத்து (எ) வெங்கடேஷ் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். உடன் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், பகுதி செயலாளர் மாபா.அன்புதுரை, நிர்வாகிகள் அகஸ்டின் பாபு, நுங்கை வி.எஸ்.ராஜ்6, எம்.ஆர்.ஜம்புலிங்கம், வட்டச் செயலாளர் எப்.பீட்டர் ஜான், ஆர்.பாபு, என்.ராமன், எம்.சிவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

### ரூ 3.12 கோடி மதிப்பீட்டில்

# சீரமைக்கப்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூன் 30 -**

**ரூ.3.12 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ள 3 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், ரூ.34.76 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 2 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடங்கள் மற்றும் ஒரு புதிய பேருந்து நிலையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் திருவள்ளூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 3 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ள 3 பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், கடலூர், திருப்பூர், விருதுநகர், திருநெல்வேலி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 34 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், 2 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலக வளாகக் கட்டடங்கள் மற்றும் ஒரு புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

### சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும்!

தந்தை பெரியாரின் சமூக சமத்துவ கொள்கையை செயல்படுத்தும் பொருட்டும், அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும் என்ற நோக்கத்துடனும் “பெரியார் நினைவு சமத்துவபுரம்” முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அதன்படி, 1997 - 2001 வரையில் 145 சமத்துவபுரங்கள் மற்றும் 2008-2011 வரையில் 93 சமத்துவபுரங்கள், என மொத்தம் 238 சமத்துவபுரங்களை அமைக்க ஆணையிடப்பட்டு, 233 சமத்துவபுரங்கள் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 5 சமத்துவபுரங்களில், ஒரு சமத்துவபுரம் பணி முடிக்கப்படாத நிலையிலும், 4 சமத்துவபுரங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படாத நிலையிலும் கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வந்தது.

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், கொழுவாரி ஊராட்சியில் அமைக்கப்பட்ட சமத்துவபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்ட சமத்துவபுரம் ஆகிய இரண்டு சமத்துவபுரங்களும் முற்றிலுமாக சீரமைப்பு செய்யப்பட்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, தற்பொழுது, மீதமுள்ள மூன்று சமத்துவபுரங்களில், திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராமசமுத்திரம் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 100 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் 70.14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்பு பணிகள் 31.01 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 101.15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், நல்லூர் ஊராட்சி ஒன்றியம், தொளார் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 78 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் 71.44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்பு பணிகள் 26.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 97.94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### பழுதுகள் நீக்கம்!

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், காட்டுக்குளம் ஊராட்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் 100 வீடுகளுக்கான சிறுபழுதுகள் நீக்கம் 87.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளின் சீரமைப்பு பணிகள் 25.41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், என மொத்தம் 112.81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்காணும் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள சமத்துவபுரங்கள் 3 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைத்து, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

மேலும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை சந்திக்க வரும் பொதுமக்கள் ஆகியோரின் வசதிக்காக, பழைய பழுதடைந்த கட்டடங்களுக்கு மாற்றாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 277 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 211 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, கடலூர் மாவட்டம் - ஸ்ரீமுஷ்ணம் ஒன்றியத்தில் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவிலும், திருப்பூர் மாவட்டம் - காங்கயம் ஒன்றியத்தில் 3 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிலும், விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் ஒன்றியத்தில் 3 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம் - அம்பாசமுத்திரம் ஒன்றியத்தில் 2 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் - வடமதுரை ஒன்றியத்தில் 3 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 5 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்.

இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடமானது 17,324 சதுர அடி பரப்பளவில், இரண்டு தளங்களுடன், ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கு, பயிற்சி அரங்கு, ஊராட்சி ஒன்றிய தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான அறைகள், பொறியியல் பிரிவிற்கென தனி அலுவலகம், கணினி அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் இயங்கி வரும் மாவட்ட அளவிலான அலுவலகங்களை ஒருங்கிணைக்கும் வகையில், பல்வேறு அலுவலர்களுக்கு தனித்தனி அறைகளுடன் கிருஷ்ணகிரியில் 8 கோடி ரூபாய் செலவிலும், நாமக்கல்லில் 8 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலும், தலா 28,716 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம் - நல்லூர் ஒன்றியம், வேப்பூர் ஊராட்சியில் 51 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் 57,620 சதுர அடி பரப்பளவில் 2 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில், 10 பேருந்துகள் நிறுத்துவதற்கென தனித்தனி பேருந்து நிறுத்தும் தளங்கள், பயணிகள் மற்றும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான தளங்கள், பயணிகள் அமரும் இடம், குடிநீர், மின்விளக்கு வசதிகள், கழிப்பறைகள், பேருந்துகளின் வருகை மற்றும் புறப்படும் நேரத்தைக் காட்டும் வரை பலகை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு. தாரேஸ் அஹமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு” முதற்கட்ட பங்களிப்பாக ரூ.1 கோடிக்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் டால்மியா நிறுவன நிர்வாக இயக்குநர் புனித் டால்மியா சார்பில் ஹர்மீத் சிங் செட்டி நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில் வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் த.ஜெ.மேகநாத ரெட்டி, டால்மியா மாநில கார்ப்பரேட் விவகாரங்களின் தலைவர் ராமநாதன் ஆகியோர் உள்ளனர்.